**மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலம்**

O.S. No. 4 of 2021

பெயர் : Dr. Mansour

25.8.2025

**பி.வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் என் முதல் விசாணை ஆணையுறுதி பத்திரத்தில் 2வது பத்தியில் என் மனைவியால் துபாயில் இருந்து இந்தியாவிற்கு பயணம் செய்யமுடியாது என்று மட்டுமே கூறியுள்ளேன், என்ன காரணத்திற்காக அவரால் பயணம் செய்யமுடியவில்லை என்பதை குறிப்பாக கூறவில்லை என்று சொன்னால், அவருக்கு உடம்பு சரியில்லை ஆனால் அது என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தில் விடுபட்டுள்ளது. எனக்கு இவ்வழக்கை பற்றி நன்றாக தெரியும், அதை நான் என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்திலும் கூறியுள்ளேன் என்று சொன்னால், ஆமாம். இவ்வழக்கின் பிராதையும், பிராதுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களையும் நான் படித்து பார்த்துள்ளேனா என்று கேட்டால், கிரைய பத்திரத்தை மட்டும் படித்து பார்த்தேன்.

இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி என் மனைவிக்கு 25.7.2020ஆம் தேதி ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றும், அந்த அறிவிப்பை என் மனைவி 30.7.2020ஆம் தேதி பெற்றுள்ளார் என்று சொன்னால், அதற்கு வாய்ப்பில்லை, என்னிடம் காண்பிக்கப்படும் Exhibit A5 அஞ்சல் ஒப்புதல் அட்டையில் இருப்பது என் மனைவியின் கையொப்பம் இல்லை. Exhibit A4 வழக்கு முன் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள்தான் இவ்வழக்கின் பிராதிலும் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால், நான் Exhibit A4 அறிவிப்பை பார்க்கவில்லை.

என் மனைவி Exhibit A4 வழக்கு முன் அறிவிப்பை வாங்கியுள்ளார் என்றும், ஆனால் அதற்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றும், பதில் அறிவிப்பு அனுப்பாததற்கான காரணத்தை எதிர் வழக்குரையிலும், என் மனைவி சொல்லவில்லை என்று சொன்னால், என் மனைவி வழக்கு முன் அறிவிப்பை வாங்கவே இல்லை.

Exhibit A3 கிரைய பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எல்லாம் உண்மை என்று சொன்னால், ஆமாம். Exhibit A3 கிரைய பத்திரத்தில் 6வது பக்கத்தில் என் மனைவி RTGS மூலம் வாதிக்கு ரூபாய் 25,00,000/-ஐ வாதியின் ஆந்திரா பேங்க் வங்கி கணக்கிற்கு அனுப்பினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால், I did not focus on it என்று சாட்சி முதலில் கூறிவிட்டு பிறகு அது சரியில்லை, வாதிக்கு பணமாகதான் அத்தொகை கொடுக்கப்பட்டது என்று கூறுகிறார். வாதிக்கு பணமாகதான் கிரைய தொகை கொடுக்கப்பட்டது என்பதை ஏன் Exhibit A3 கிரைய பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால், Exhibit A3 கிரைய பத்திரத்தில் வாதி பணத்தை பெற்றுக்கொண்டார் என்று வாசகம் இருப்பதால், நான் அது போதுமானது என்று கருதிவிட்டேன்.

வாதிக்கு பணமாக என்று கொடுக்கப்பட்டது என்று கேட்டால், கிரைய பத்திரம் மதியம் 3.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டது, அன்று பகல் 1.00 மணிக்கே வாதிக்கு பணம் கொடுக்கப்பட்டது. நான் வாதிக்கு கிரைய தொகை பணமாகதான் கொடுக்கப்பட்டது என்பதை எதிர்வழக்குரையிலும், என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்திலும் சொல்லப்பட்டுள்ளதா என்று கேட்டால், சொல்லப்பட்டிருக்கிறது. வாதிக்கு கிரைய தொகை பணமாக கொடுக்கப்பட்டதற்கு வாதியிடம் இருந்து தனியாக ரசீது ஏதாவது வாங்கினோமா என்று கேட்டால், கிரைய

பத்திரத்திலேயே வாதி கிரைய தொகையை பெற்று கொண்டதாக வாசகம் உள்ளது என்பதால், அது போதுமானது என்று நினைத்துவிட்டோம். வருமான வரி சட்டப்படி கிரையத்திற்கு ரூபாய் 20,000/−ற்கு மேல் பணமாக கொடுப்பது சட்ட விரோதமானது என்பது எனக்கு தெரியுமா என்று கேட்டால், நாங்கள் கொஞ்சம் பணம்தான் வைத்திருந்தோம், பாக்கி பணத்தை எங்கள் உறவினர்களிடம் இருந்து ஏற்பாடு செய்து கொடுத்தோம், வாதி பணமாகதான் வேண்டும் என்று சொல்லிவிட்டார். வாதி கிரைய தொகையை பணமாகதான் வேண்டும் என்று சொன்னார் என்பதை எதிர் வழக்குரையிலும், முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்திலும் சொல்லியுள்ளோமா என்று கேட்டால், வாதி வங்கி கணக்கு எண்ணை கொடுக்காமல், பணமாகதான் கேட்டார், ஆனால் அது சொல்ல விடுபட்டுள்ளது. நான் பாக்கி கிரைய தொகையை உறவினர்களிடம் இருந்து ஏற்பாடு செய்து வாதிக்கு கொடுத்ததாக கூறுகிறேன், அந்த உறவினர்களின் பெயர்களை சொல்லமுடியுமா என்று கேட்டால், ராய்பூரில் இருக்கும் என் மைத்துனர் Abdul Hak kalith quraishi இடம் இருந்து பாக்கி கிரைய தொகையை ஏற்பாடு செய்து வாதிக்கு கொடுத்தேன். ராய்பூரில் இருக்கும் என் மைத்துனர் Abdul Hak kalith quraishi இடம் இருந்து ரூபாய் 10,00,000/− வாங்கினோம். பிலாய் ஊரில் இருக்கும் என் Sister in law Yasmine quraishi இடம் இருந்து ரூபாய் 5,00,000/− வாங்கினோம்.

எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கும், என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை தாக்கல் செய்வதற்கும் வழக்கறிஞருக்கு நான்தான் தகவல் கொடுத்தேனா என்று கேட்டால், நானும், என் மனைவியும் தகவல் கொடுத்தோம். ராய்பூரில் இருந்து ரூபாய் 10,00,000/−ஐ என் மைத்துனர் Abdul Hak kalith quraishi இடம் இருந்து எப்படி ஊட்டிக்கு கொண்டுவந்தோம் என்று கேட்டால், என் மைத்துனர் Abdul Hak kalith quraishi தான்

ரூபாய் 10,00,000/−ஐயும், என் Sister in law Yasmine quraishi இடம் இருந்து நாங்கள் வாங்கிய ரூபாய் 5,00,000/−ம் ஊட்டிக்கு கொண்டுவந்து எங்களிடம் கொடுத்தார். தாவா சொத்தை வாதி என் மனைவிக்கு விற்ற சமயத்தில் வாதிதான் அச்சொத்திற்கு உரிமையாளர் என்பதில் எங்களுக்கு எந்த சந்தேகமும் இல்லை என்று சொன்னால், ஆமாம்.

வாதியின் உறவினர் டாக்டர். ரவிசந்திரனை எங்களுக்கு நன்றாக தெரியும் என்று சொன்னால், அவரும், நானும் துபாயில் ஒரு மருத்துவமனையில் ஒன்றாக வேலை பார்த்தோம், அதனால் அவரை எங்களுக்கு நன்றாக தெரியும். இந்த transactionல் டாக்டர். ரவிசந்திரனுக்கு என்ன role என்று கேட்டால், அவருக்கு இந்த transactionல் role எதுவும் இல்லை, நிலம் இருப்பதாக மட்டும் சொன்னார். தாவா சொத்தின் மூல பத்திரங்களான Exhibit A1 மற்றும் Exhibit A2 வாதியிடம்தான் இருக்கிறது என்று சொன்னால், கிரையம் பதிவு செய்த தேதியிலேயே நாங்கள் துபாய் போக வேண்டி இருந்ததால், வழக்கறிஞர் திரு.லாவனுக்கு அங்கீகார கடிதம் கொடுத்து அவரை ஆவணங்களை பெற்று எங்களுக்கு அனுப்புமாறு சொல்லிவிட்டு நாங்கள் துபாய்க்கு போய்விட்டோம், ஆனால் வழக்கறிஞர் திரு.லாவன் ஆவணங்களை பெற்று அதை வாதியிடமே கொடுத்துவிட்டார், அதனால்தான் இந்த பிரச்சனை எல்லாம் வந்தது. வழக்கறிஞர் திரு.லாவன் வாதியின் வழக்கறிஞர் என்று எதிர்வழக்குரையிலும், என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்திலும் கூறியுள்ளோம், நாங்கள் தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு, அதன் title பற்றி விசாரணை செய்தோமா என்று கேட்டால், அதையும் செய்ய சொல்லி நாங்கள் வழக்கறிஞர் திரு.லாவனிடமே சொன்னோம். இந்த transaction நடக்கும்போது எங்களுக்கு யார் வழக்கறிஞர் என்று கேட்டால், நாங்கள் துபாயில் இருந்து கிளம்பி இங்கே வந்தோம், எல்லாமே வழக்கறிஞர் திரு.லாவன்தான் செய்து வைத்தார்.

நான் 27.4.2012ஆம் தேதி கோத்தகிரி காவல் நிலையத்திற்கு அனுப்பிய மெயிலில் எங்கள் வழக்கறிஞர் திரு.லாவன் என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால், அவர்தான் இந்த transaction எல்லாத்தையும் செய்தார். இந்த transaction நடந்தபோது தாவா சொத்திற்கு என்ன guideline value என்பது எனக்கு தெரியுமா என்று கேட்டால், அந்த valueவைதான் கொடுத்தோம், அதாவது கிரைய பத்திரத்தில் guideline valueவைதான் காண்பித்துள்ளோம்.

வாதி Exhibit A3 கிரைய பத்திரத்தை எழுதி கொடுத்த பிறகு தாவா சொத்திற்கான உரிமை என் மனைவி பெயரில் மாறிவிட்டது என்று சொன்னால், ஆமாம். வாதி பணத்தை பெற்றுக்கொள்ளாமல் Exhibit A3 கிரைய பத்திரத்தை என் மனைவி பெயரில் எழுதி கொடுத்ததால், தாவா சொத்தின் உரிமை என் மனைவி பெயருக்கு மாறிவிட்டது என்றும், வாதி கிரைய பணத்தை பெறவில்லை என்பதால் transfer of property Act படி வாதிக்கு தாவா சொத்தில் பற்றுகை உள்ளது என்று சொன்னால், அப்படி சொல்வது சுத்த பொய்யாகும்.

கிரையத்தை பதிவு செய்வதற்கு ஒருநாள் முன்பு நாங்கள் துபாயில் இருந்து ஊட்டிக்கு வந்தோம். என் மைத்துனர் மற்றும் மைத்துனியிடம் இருந்து நாங்கள் கிரையத்திற்காக பெற்ற மொத்தம் ரூபாய் 15,00,000/−தவிர பாக்கி கிரைய தொகையான ரூபாய் 10,00,000/−ஐ நாங்கள் எப்படி ஊட்டிக்கு எடுத்து வந்தோம், துபாயில் இருந்து எடுத்து வந்தோமா அல்லது இங்கேயே வைத்திருந்தோமா என்று கேட்டால், அந்த ரூபாய் 10,00,000/− என் மனைவி மற்றும் என் மாமியாரின் பணம் ஆகும், அந்த ரூபாய் 10,00,000/−ஐயும் என் மைத்துனர் Abdul Hak kalith quraishi தான் ஊட்டிக்கு எடுத்து வந்தார். என் மனைவி பாக்கி கிரைய தொகையை எந்த வங்கி கணக்கில் இருந்து withdraw செய்தார்

என்று கேட்டால், வங்கியில் இருந்து எடுக்கவில்லை, என் மாமியாரிடம் இருந்தது, என் மாமியாருக்கு சிறியதாக ரெடிமேட் துணிகள் வியாபாரம் உள்ளது. கிரைய சமயத்தில் என் மனைவி வருமானவரி செலுத்தி வந்தாரா என்று கேட்டால், இல்லை செலுத்தவில்லை. வாதி அவருடைய வங்கி கணக்கு எண்ணை எங்களிடம் கொடுக்காதபோது Exhibit A3 கிரைய பத்திரத்தில் எப்படி வாதியின் வங்கி ஆந்திரா வங்கி என்று குறிப்பிடப்பட்டது என்று கேட்டால், அதை நாங்கள் சொல்லவில்லை, வழக்கறிஞர் திரு.லாவன்தான் அதை கிரைய பத்திரத்தில் போட்டார். நான் மருத்துவராக நல்ல விவரமானவராக இருப்பதால், கிரைய பத்திரத்தை நான் படித்து பார்க்கவில்லையா என்று கேட்டால், படித்து பார்த்தேன், ஆனால் திரு.லாவன் வழக்கறிஞர் என்பதால் அவரை நம்பினோம்.

எங்கள் எதிர்வழக்குரையிலும், என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்திலும் வாதியும், வழக்கறிஞர் திரு.லாவனும் சேர்ந்து foul playல் ஈடுபட்டுள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளோம், அதில் வழக்கறிஞர் திரு.லாவன் role என்ன என்று கேட்டால், வழக்கறிஞர் திரு.லாவன் நாங்கள் அவருக்கு கொடுத்த அங்கீகார கடிதத்தை அவர் தவறாக பயன்படுத்தியுள்ளார், அவர் ஒரு வழக்கறிஞர் என்பதால் நாங்கள் அவரை நம்பினோம், அவரை நம்பிதான் அவரை ஆவணங்களை பெற்று அவற்றை துபாய்க்கு எங்களுக்கு அனுப்ப சொல்லி சொன்னோம், ஆனால் அவர் ஆவணங்கள் அனைத்தையும் பெற்று வாதியிடம் கொடுத்துவிட்டார். இது சம்பந்தமாக நாங்கள் வழக்கறிஞர் திரு.லாவன்மீது தமிழ்நாடு பார் கவுன்சிலில் புகார் கொடுத்தோமா என்று கேட்டால், அது பெரிய பிராசஸ் என்று சொன்னார்கள், அந்த சமயத்தில் எனக்கு மாரடைப்பு ஏற்பட்டதால் தமிழ்நாடு பார் கவுன்சிலில் வழக்கறிஞர் திரு.லாவன்மீது நாங்கள் புகார் கொடுக்கவில்லை. அதன்பிறகு நாங்கள் வழக்கறிஞர்

திரு.லாவன்மீது தமிழ்நாடு பார் கவுன்சிலில் புகார் கொடுத்தோமா என்று கேட்டால், நாங்கள் பேச்சு வார்த்தை நடத்தினோம், அதற்குள் வாதி இந்த வழக்கை போட்டுவிட்டார். Foul play என்பது தவறான செய்தை என்பதால் எப்படி நாங்கள் பேச்சு வார்த்தை நடத்தினோம் என்று கேட்டால், வழக்கறிஞர் திரு.லாவனிடம் ஆவணங்களை வாதியிடம் இருந்து திரும்ப பெற்று தருமாறு கேட்டோம். இந்த ஆவணங்களை சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து யார் பெற்றார் என்று கேட்டால், வழக்கறிஞர் திரு.லாவன் தான் பெற்றார். என் மனைவி வழக்கறிஞர் திரு.லாவனுக்கு கொடுத்த அங்கீகார கடிதத்தின்பேரில்தான் அவர் ஆவணங்களை சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பெற்றார்.

நான் குறுக்கு விசாரணையில் வாதி அனுப்பிய வழக்கறிஞர் முன் அறிவிப்பை என் மனைவி வாங்கவில்லை என்றும், அஞ்சல் ஒப்புதல் அட்டையில் இருப்பது என் மனைவியின் கையொப்பம் இல்லை என்றும், பகுதி கிரைய தொகையை என் மைத்துனர், மைத்துனி மற்றும் மாமியாரிடம் இருந்து பெற்றோம் என்றும், கிரைய தொகை முழுவதையும் பணமாகதான் வாதிக்கு செலுத்தினோம் என்றும் கூறியுள்ளதை நாங்கள் எங்கள் எதிர்வழக்குரையிலும், என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்திலும் சொல்லவில்லை என்று சொன்னால், இவ்வளவு விவரமாக சொல்லவில்லை, ஆனால் சுருக்கமாக வாதிக்கு கிரைய தொகையை செலுத்திவிட்டோம் என்று சொல்லியுள்ளோம்.

நான் சட்டத்தை மதித்து நடப்பவர்தான். வருமான வரி சட்டப்படி நிலக்கிரையம் சம்பந்தமாக ரூபாய் 20,000/-க்கு மேல் பணமாக கொடுக்க முடியாது என்ற பட்சத்தில் நாங்கள் எப்படி அந்த சட்டத்தை மீறி மொத்த கிரைய தொகையையும் வாதிக்கு பணமாக செலுத்தினோம் என்று கேட்டால், அந்த சமயத்தில்

எங்களிடம் முழு கிரைய தொகை இல்லை, நாங்கள் கடன் வாங்கிதான் கிரையம் பெற்றோம். நாங்கள் கிரைய தொகையில் கடனாக பெற்ற ரூபாய் 15,00,000/–ஐ தவிர பாக்கி ரூபாய் 10,00,000/–ஐ எப்படி வருமான வரி சட்டத்தை மீறி பணமாக வாதிக்கு செலுத்தினோம் என்று கேட்டால், அந்த சமயத்தில் பணமாக கொடுக்கலாம் என்றுதான் சட்டம் இருந்தது.

கிரையத்தை பெற்ற என் மனைவி சாட்சிக்கூண்டில் ஏறினால் உண்மை வெளி வந்துவிடும் என்ற பயத்தால்தான் அவர் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திற்கு வரவில்லை என்று சொன்னால், சரியில்லை, அவருக்கு உடம்பு சரியில்லை. அந்த பயத்தால்தான் என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தில் என்ன காரணத்திற்காக என் மனைவியால் நீதிமன்றத்திற்கு வரமுடியவில்லை என்பதையும் குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால், சரியில்லை. Exhibit A3 கிரைய பத்திரத்தில் கண்ட கிரைய தொகையை என் மனைவி வாதிக்கு கொடுக்கவில்லை என்றும், அதனால்தான் என் மனைவி முழு கிரைய தொகையையும் வாதிக்கு கொடுத்ததற்கான ஆதாரம் எதுவும் எங்களிடம் இல்லை என்று சொன்னால், அப்படி சொல்வது தவறாகும். வாதி நாங்கள் கிரைய தொகையை கொடுக்க வேண்டும் என்பதற்காகதான் தாவா சொத்திற்கான மூல பத்திரங்களை நாங்கள் கிரைய தொகையை செலுத்தியபிறகு எங்களிடம் கொடுக்கலாம் என்று வைத்திருந்தார் என்றும், ஆனால் நாங்கள் கிரைய தொகையை வாதிக்கு செலுத்தவில்லை என்று சொன்னால், அப்படி சொல்வது பொய்யாகும். என் மனைவிதான் வாதியை Exhibit A1, Exhibit A2 மற்றும் Exhibit A3 ஆவணங்களை வைத்திருக்க சொன்னார் என்று சொன்னால், என் மனைவி அந்த ஆவணங்களை பார்த்தது கூட கிடையாது. வாதிக்கு பணமாகதான் கொடுத்தோம் என்று தற்போதுதான் நான்

முதன்முறையில் நீதிமன்றத்தில் கூறுகிறேன் என்றும், அதற்கான வாதுரையும் இல்லை என்றும், வாதிக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்காமல் ஏமாற்றுவதற்காகதான் அப்படி கூறுகிறேன் என்று சொன்னால், சரியில்லை. வாதிக்கு கிரைய தொகையை நாங்கள் கொடுக்காததால் அவர் கிரைய தொகையை கேட்டு எங்களை தொடர்பு கொண்டார் என்றும், நாங்கள் வாதியிடம் கொஞ்சம் நாளில் கிரைய தொகையை கொடுத்துவிடுவதாக சொன்னோம் என்றும் சொன்னால், அப்படி சொல்வது பொய்யாகும். என் மனைவி பாக்கி கிரைய தொகை ரூபாய் 25,00,000/—ஐ வாதியிடம் கொடுக்கும்வரை, வாதிக்கு தாவா சொத்துமீது பற்றுகை இருக்கிறது என்று சொன்னால், சரியில்லை, நாங்கள் முழு கிரைய தொகையையும் வாதியிடம் கொடுத்துவிட்டோம்.

என் மனைவி Exhibit A4 வழக்கு முன் அறிவிப்பை வாங்கியுள்ளார் என்றும், அதிலுள்ள விவரங்கள் உண்மை என்பதால்தான் என் மனைவி பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்று சொன்னால், என் மனைவி வழக்கு முன் அறிவிப்பை வாங்கவே இல்லை. நானும், என் நண்பரான டாக்டர்.ரவிசந்திரனும் சேர்ந்து வாதிக்கு கிரைய தொகையை கொடுக்காமல் தாவா சொத்தை என் மனைவி பெயரில் எழுதி வாங்கிக்கொண்டு வாதியை ஏமாற்றிவிட்டோம் என்று சொல்வது தவறாகும். வழக்கறிஞர் திரு.லாவன் எங்கள் வழக்கறிஞராகதான் transaction சமயத்தில் இருந்தார் என்றும், ஆனால் அவர் வாதியின் வழக்கறிஞர் என்று நாங்கள் பொய்யாக சொல்கிறோம் என்றும், மேலும் வழக்கறிஞர் திரு.லாவன் ஏமாற்றிவிட்டதாகவும் நாங்கள் பொய்யாக சொல்கிறோம் என்று சொன்னால், அப்படி சொல்வது தவறாகும். நாங்கள் Exhibit A1 முதல் Exhibit A3 ஆவணங்களை வாதியிடம் கேட்காததற்கு காரணம், நாங்கள் வாதிக்கு கிரைய

தொகையை கொடுக்கவில்லை என்பதுதான் என்று சொன்னால், அப்படி சொல்வது தவறாகும்.

N. MURALIDHARAN
Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.08.25 16:56:09 +0530